பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16. (அ) கற்புக்குரிய மெய்ப்பாடுகள் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) உவமத்தின் பாகுபாடு குறித்து விவரித்து எழுதுக.

17. (அ) தொடையின் வகைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மரபியலில் இடம்பெறும் பெண்பாற்பெயர்களைத் தொகுத்துரைக்க.

18. (அ) தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை இரண்டும் ஒன்றுபடும் இடங்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கூறும் பாவகைகள் குறித்து கட்டுரைக்க.

19. (அ) வண்ணத்தின் வகைகள் குறித்து தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நூலின் வகைகள் குறித்து தொகுத்துரைக்க.

20. (அ) தொல்காப்பியம் எழுந்ததின் நோக்கத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் பெற்ற இடத்தினை விவரிக்க.



**Reg. No. : ................................**

**Code No. : 7216** **Sub. Code : ZTLM 42**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024.

Fourth Semester

தமிழ் – Core

இலக்கணம் IV தொல்காப்பியம், பொருள் II (6, 9 இயல்கள்)

(For those who joined in July 2021-2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. அழுகை என்னும் மெய்ப்பாடு எத்தனை நிலைகளன்களைப் பெற்று வரும்?

(அ) மூன்று (ஆ) ஐந்து

(இ) ஏழு (ஈ) நான்கு

2. 'ஏதம்' என்ற சொல்லின் பொருள் ————.

(அ) அச்சம் (ஆ) அழுகை

(இ) குற்றம் (ஈ) கோபம்

3. எழுசீர் இறுதி ஆச்சரியம் ————.

(அ) ஆகும் (ஆ) கியற்றே

(இ) கலியே (ஈ) முடியும்

4. கீழ்க்கண்டவற்றுள் மூன்றறிவு கொண்ட உயிரினம்

(அ) புல் (ஆ) எறும்பு

(இ) நண்டு (ஈ) நத்தை

5. தொல்காப்பியர் கூறும் அடியின் வகைகள் எத்தனை?

(அ) 5 (ஆ) 3

(இ) 6 (ஈ) 8

6. தூங்கல் ஓசை பெற்றுவரும் பாவகை எது?

(அ) மருட்பா (ஆ) ஆசிரியப்பா

(இ) கலிப்பா (ஈ) வஞ்சிப்பா

7. நான்கு சீர்களாய், அராகத்தின் இயல்பைப் பெற்று வருவது —————.

(அ) உருட்டு வண்ணம் (ஆ) தூங்கல் வண்ணம்

(இ) முடுகு வண்ணம் (ஈ) ஒரூஉ வண்ணம்

8. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பில் கரப்பின்றி முடிவது ————— ஆகும்?

(அ) உரை (ஆ) காண்டிகை

(இ) வழிநூல் (ஈ) முதல்நூல்

9. பொருண்மையியல் வேறுபாடுகளை கூறியவர் யார்?

(அ) பவணந்தி முனிவர்

(ஆ) ஐயனாரிதனார்

(இ) கா. சிவத்தம்பி

(ஈ) பாலசுப்ரமணியன்

10. 'தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியம்' என்ற கட்டுரையை எழுதியவர் —————.

(அ) பாலசுப்பிரமணியன்

(ஆ) மீனாட்சி

(இ) இராமநாதன்

(ஈ) சண்பகம்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) மூன்றாம், நான்காம் அவத்தைக்குரிய மெய்ப்பாடுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் உவமை தோன்றும் இடங்களாகக் கூறுவனவற்றை எழுதுக.

12. (அ) யாப்பின் இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆண்பாற் பெயர்களைச் சான்றுடன் விவரி.

13. (அ) தொல்காப்பியத்தில் இருந்து சீரின் வகைகள் யாப்பருங்கலக்காரிகையில் வேறுபடும் இடத்தினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) வெண்பா, ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் குறிப்பிடுக.

14. (அ) ஏதேனும் ஐந்து வண்ணங்களின் வகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சூத்திரத்தின் இலக்கணம் குறித்து விளக்குக.

15. (அ) தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மொழிப் பொருண்மையினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தமிழர் சிந்தனையில் தொல்காப்பியம் பெறும் இடத்தினை விவரி.



Nesamony Memorial Christian College, Marthandam